# குடியேற்ற வீசாக்கள்

ஐக்கிய அமெரிக்காவிற்கான குடியேற்ற வீசாக்கள் இலங்கை மற்றும் மாலைதீவின் பிரஜைகளுக்கும் வதிவிடவாசிகளும் ஐக்கிய அமெரிக்காவிற்கான கொழும்புத் தூதரகத்தில் உரிய முறையில் மேற்கொள்ளப்படுகின்றன.

குடியேற்ற வீசா ஒன்றிற்காக விண்ணப்பிப்பதற்கு, வெளிநாட்டுப் பிரஜை ஒருவர் அங்கு சென்று குடியேறுவதற்கு ஐக்கிய அமெரிக்க நாட்டுப் பிரஜை ஒருவர் அல்லது சட்டரீதியாக நிரந்தர வதிவிட உரிமை பெற்ற நெருங்கிய உறவினர் ஒருவர் அல்லது எதிர்கால ஐக்கிய அமெரிக்க நாட்டுத் தொழில்தருநர் ஆகியோரில் எவரேனும் ஒருவர் மூலம் பொதுவாக உத்தரவாதமளிக்கப்படுதல் / ஆதரவளிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், குடியேற்ற வீசா ஒன்றிற்காக விண்ணப்பிப்பதற்கு முன்னர் அனுமதியளிக்கப்பட்டுள்ள விண்ணப்பப் பத்திரத்தினையும் வைத்திருத்தல் வேண்டும். உத்தரவாதமளிப்பவர் / ஆதரவளிப்பவர் ஐக்கிய அமெரிக்காவின் பிரஜாவுரிமை மற்றும் குடியேற்ற சேவைகளுடன் (USCIS) வெளிநாட்டுப் பிரஜையின் சார்பில் நிரப்பப்படுகின்ற விண்ணப்பப் படிவத்தின் மூலம் தனது செயற்பாடுகளை ஆரம்பிப்பார்.

நீங்கள் எமது பல்வகைமை குடியேற்ற நிகழ்ச்சித்திட்ட வீசா உள்ளிட்ட ஐக்கிய அமெரிக்காவிற்கான குடியேற்ற வீசாக்களின் வெவ்வேறு வகைகளைப் பற்றி அறிந்து கொள்வதற்கு **usvisas.state.gov** என்ற எமது இணையத்தளத்தில் **வீசா வகைகளின் விபரக் கொத்தினை (Directory of Visa Categories)** பார்வையிடுவதற்கு விரும்பலாம். பின்னர், **usvisas.state.gov** என்ற எமது இணையத்தளத்தில் குடியேற்ற வீசா ஒன்றிற்காக விண்ணப்பிக்க ஆரம்பிப்பதுடன், **குடியேற்ற வீசாவிற்கான செயல்முறைகளை அல்லது பல்வகைமை குடியேற்ற வீசாவிற்கான செயல்முறைகளைப் (Immigrant Visa Process or Diversity Visa Process)** படிமுறையாகப் பின்பற்றவும்.

உங்களுடைய விண்ணப்பப் படிவத்திற்கு அனுமதியளிக்கப்பட்டு நீங்கள் தேசிய வீசா நிலையத்துடன் (NVC) ஆரம்பச் செயற்பாடுகளைப் பூர்த்தி செய்ததும், அல்லது நீங்கள் பல்வகைமை குடியேற்ற வீசா அதிர்ஷ்டச் சீட்டிலுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்டு கென்ரக்கி தூதரக நிலையத்துடன் (KCC) செயற்பாடுகளைப் பூரணப்படுத்தியவராக இருப்பின், மேலதிக வழிகாட்டல்களுக்கும் அறிவுறுத்தல்களுக்குமாக இந்த இணையத்தளத்தில் உள்ள தகவல்களுடன் தேசிய வீசா நிலையம் அல்லது கென்ரக்கி தூதரக நிலையம் மூலம் உங்களுக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களை மீள்பரிசீலனை செய்யவும்.